


12. 07. 2025

தலைப்பு செய்திகள்

- வளர்ச்சி அடைந்த இந்தியாவை கட்டமைப்பதில் இளையோரின் ஆளுமையை அதிகரிக்க ரோஜ்கர் மேளா வழிகோலுவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- தென் மாநிலங்களின் வளர்ச்சியால் மட்டுமே தேசத்தின் ஒட்டுமொத்த மேம்பாடு சாத்தியமாகும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா கூறியுள்ளார்.
- தமிழகத்தில் கல்வித்துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.
- TNPSC குரூப் 4 தேர்வு முடிவுகள் மூன்று மாதங்களுக்குள் வெளியிடப்படும் என்று இதன் தலைவர் திரு.பிரபாகர் அறிவித்துள்ளார்.
- இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 5-வது இறுதி 20-20 மகளிர் கிரிக்கெட் போட்டி பர்மிங்ஹாமில் இன்று நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள

************

## Rozgar Mela

வளர்ச்சி அடைந்த இந்தியாவை கட்டமைப்பதில் இளையோரின் ஆளுமையை அதிகரிக்க மத்திய அரசின் அர்ப்பணிப்பை ரோஜ்கர் மேளா பிரதிபலிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 16-ம் கட்ட Rozgar Mela சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் 51 ஆயிரம் இளையோருக்கு காணொலி

மூலம் மத்திய அரசின் பணியிடங்களுக்கான நியமன ஆணைகளை வழங்கி பேசிய அவர், இளையோர், ஆளுமையுடன், மிகப்பெரிய ஜனநாயக சக்தியாக இந்தியா திகழ்கிறது என்றார்.

தேசகட்டமைப்பில் புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மிகப்பெரும் வளர்ச்சி அடைந்துவருவதை சுட்டிக்காட்டிய பிரதமர், இளையோரின் திறன்களை இது மேலும் ஊக்குவிப்பதாக குறிப்பிட்டார்.

வேலைவாய்ப்புடன் கூடிய ஊக்கத்தொகை திட்டத்திற்கு மத்திய அரசு அண்மையில் ஒரு லட்சம் கோடி ரூபாய் அனுமதித்துள்ளதை எடுத்துரைத்த பிரதமர், இதன்மூலம் 3 கோடியே 50 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டத்தின் மூலம் 11 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டதை எடுத்துரைத்த அவர் பாதுகாப்பு உற்பத்தியில் இந்தியா சாதனைபடைத்து வருவதாக கூறினார்.

நாட்டின் ராணுவ தளவாட உற்பத்தி ஒரு லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

நாடுமுழுவதும் 47 இடங்களில் இன்று நடைபெற்ற ரோஜ்கர் மேளா வேலைவாய்ப்பு முகாமில் மத்திய அமைச்சர்கள், நியமன ஆணைகளை இளையோருக்கு வழங்கினார்கள்.

இதன் ஒருபகுதியாக சென்னை ஒருங்கிணைந்த ரயில்பெட்டி தொழிற்சாலை வளாகத்தில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் பணி நியமன ஆணைகளை வழங்கி உரையாற்றினார்.

ரோஜ்கர் மேளா மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 250 பேரில் 154 பேர் ரயில்வே துறையில் பணியாற்ற உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அனைத்து துறைகளிலும் தரமான உள்கட்டமைப்புடன் கூடிய வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான பிரதமரின் தொலைநோக்கு சிந்தனையை ரோஜ்கர் மேளா உறுதி செய்வதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

நாட்டின் வளர்ச்சியில் ரயில்வே அளப்பரிய பங்கு வகிப்பதாக பாராட்டு தெரிவித்த அமைச்சர் உலகின் மிக உயரமான செனாப் ரயில் பாலம், புதுப்பிக்கப்பட்ட பாம்பன் ரயில்பாலம் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்றார்.

மும்பை அஹமதாபாத் இடையே நாட்டின் முதலாவது புல்லட் ரயில்சேவை இன்னும் 6 மாதங்களில் தொடங்கப்படும் என கூறிய அமைச்சர் திருச்சி ஸ்ரீரங்கம், ராமேஸ்வரம், சேலம் உள்ளிட்ட 75 ரயில் நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

************

செஞ்சி கோட்டை பிரதமர்

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி கோட்டை மற்றும் மகராஷ்டிர மாநிலத்தில் மராட்டிய மன்னர்களின் 11 ராணுவ தளங்கள், கோட்டைகள், உள்ளிட்டவற்றிற்கு யுனஸ்கோ அங்கீகாரம் கிடைத்துள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மராட்டிய மன்னர்களின் சிறந்த நிர்வாகம், ராணுவ வலிமை, கலாச்சார பெருமை, சமூக மேம்பாடு உள்ளிட்டவற்றிற்கான மிகச்சிறந்த அங்கீகாரம் இது என்று தமது சமூக வலைதள பதிவில் பிரதமர் கூறியுள்ளார்.

அநீதிக்கு எதிராக துணிச்சலுடன் போராடிய இம்மன்னர்கள் நாட்டு மக்களுக்கு இன்றும் உத்வேகம் அளிப்பதாகவும் பிரதமர் பாராட்டியுள்ளார்.

இதனிடையே உலக பாரம்பரிய சின்னமாக செஞ்சி கோட்டையை யுனஸ்கோ அறிவித்துள்ளது இப்பகுதி மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக எமது விழுப்புரம் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

அமித்ஷா

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான தொலைநோக்கு பார்வை தென் மாநிலங்களின் வளர்ச்சியால் மட்டுமே சாத்தியமாகும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் பாரதிய ஜனதா கட்சி நிகழ்வில் இன்று உரையாற்றிய அவர், ஊழல் இல்லா ஆட்சி, அனைவருக்கும் அரசு திட்டங்கள் சென்றடைவது, அரசியல் நலன்களுக்கு அப்பாற்பட்ட வளர்ச்சி ஆகிய மூன்றுமே பிரதமரின் முக்கிய இலக்குகள் என்றார்.

தேச பாதுகாப்பில் மோடி அரசின் அர்ப்பணிப்பை எடுத்துரைத்த அமைச்சர், ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதல் நடவடிக்கை மூலம் இந்தியா வழங்கிய வலுவான பதிலடியை சுட்டிக்காட்டினார்.

முன்னதாக திரு.அமித்ஷா திருவனந்தபுரத்தில் பாரதிய ஜனதா கட்சியின் அலுவலகத்தை திறந்துவைத்தார்.

************

விமான விபத்து

அஹமதாபாத் ஏர் இந்தியா விமான விபத்திற்கு இரண்டு எஞ்சின்களுக்கு செல்லும் எரிபொருள் தடை பட்டதே காரணம் என்று முதற்கட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விமான விபத்து புலனாய்வு அமைப்பு தாக்கல் செய்த 15 பக்க அறிக்கையில் விமானம் புறப்பட்ட சில நொடிகளில் திடீரென இரண்டு எஞ்சின்களுக்கான எரிபொருள் தடைபட்டதை அடுத்து விமானம் கட்டிடத்தின் மீது மோதி உருக்குலைந்ததில் விபத்து நேரிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் விமான எரிபொருளில் எவ்வித கலப்படமும் இல்லை என ஆய்வில் உறுதி செய்யப்பட்ட நிலையில் அடுத்த கட்ட விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கடந்த மாதம் 12ஆம் தேதி அஹமதாபாத்திலிருந்து லண்டன் புறப்பட்ட போயிங் 787 விமானம் விபத்திற்குள்ளானதில் 260 பேர் உயிரிழந்தது நினைவிருக்கலாம்.

************

ரயில்வே

ரயில்வே வேலை வாய்ப்பில் வெளிப்படை தன்மை மற்றும் வலுவான திறன்மிகு தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட பல்வேறு சீர்திருத்தங்கள் இத்துறையில் மேற்கொள்ளப்படுவதாக மத்திய ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பல்வேறு பிரிவுகளில் நடைபெறும் தேர்வு முறைகளில் “ஒரு முறை பதிவு” அமல்படுத்தப்பட்டு விண்ணப்ப முறைகள் எளிமையாக்கப்பட்டுள்ளன.

முதல் முறையாக ரயில்வே குரூப் - சி மற்றும் முதல்நிலை தேர்வுகளுக்கு ரயில்வே கால அட்டவணை உருவாக்கப்பட்டதை அடுத்து வெளிப்படைத்தன்மை அதிகரித்திருப்பதை அமைச்சம் சுட்டிக்காட்டியுள்ளது.

ரயில்வே வேலைவாய்ப்புகளில் தொழில்நுட்ப மோசடிகளை தவிர்க்கும் வகையில், நாடுமுழுவதும் 325 மையங்கள் உருவாக்கப்பட்டு, தேர்வு கட்டமைப்பு பணிகள் நவீன தொழில்நுட்பத்திறனுடன் கண்காணிக்கப்படுவதாக அமைச்சகம் கூறியுள்ளது.

************

முதலமைச்சர்

தஞ்சை மாவட்டம் மருதகுடி கிராமத்தில் நேற்றுமாலை குளத்தில் மூழ்கி உயிரிழந்த 3 சிறுவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்க முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று உத்தரவிட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துள்ளார்.

************

அன்பில் மகேஷ்

தமிழ்நாட்டில் கல்வித்துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் ‘‘எனது பள்ளி எனது பெருமை’’ என்ற தலைப்பில் நடைபெற உள்ள இணையவழி போட்டியில் மாணவர்கள் நான் முதல்வன், வெளிநாடு கல்வி சுற்றுலா, புதுமைப்பெண் உள்ளிட்ட அரசு திட்ட பலன்கள் குறித்து தெரிவிக்கலாம் என கூறியுள்ளார்.

வாய்ஸ்

************

TNPSC

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்-4 தேர்வுகள் இன்று நடைபெற்றன.

சென்னை எழும்பூர் பிரசிடென்சி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தை நேரில் ஆய்வு செய்த TNPSC தலைவர் திரு.பிரபாகர் தேர்வு முடிவுகள் மூன்று மாதங்களுக்குள் வெளியிடப்படும் என்றார்.

25 பிரிவுகளுக்கு இன்று நடைபெற்ற ஒருங்கிணைந்த எழுத்து தேர்வில் வெற்றிபெறுபவர்களுக்கு மதிப்பெண் தகுதி அடிப்படையில் கலந்தாய்வு மூலம் பணி வழங்கப்படும் என்றும் கூறினார்.

தமிழகத்தில் இந்தாண்டு இறுதிக்குள் 10 ஆயிரம் அரசு பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், வனக்காவலர் உள்ளிட்ட 3 ஆயிரத்து 935 பணியிடங்களுக்கு இன்று காலை ஒன்பதரை மணிக்கு தொடங்கிய தேர்வுகள் 12.30க்கு நிறைவடைந்தன.

மாநிலத்தில் 13 லட்சத்திற்கும் அதிகமானோர் இத்தேர்வை எழுதினர்.

************

நாமக்கல்

நாமக்கல் மாவட்டத்தில் வரும் 15ஆம் தேதி நடைபெற உள்ள அரசின் திட்டங்கள் குறித்த சிறப்பு முகாம்களை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்தி கோரிக்கை

மனுக்களை அளித்து பயன்பெற ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

வாய்ஸ்

************

உலக காகித பை தினம்

உலக காகித பை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

சுற்றுச்சூழலை பாதிக்கும் பிளாஸ்டிக், நெகிழி பைகளுக்கு மாற்றாக காகித பை பயன்பாட்டை முன்னெடுப்பது குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

************

கன்னியாகுமரி - வாய்ஸ்

கன்னியாகுமரி கடலில் நீர்மட்டம் குறைந்து காணப்படுவதால் விவேகானந்தர் மண்டபம், திருவள்ளுவர் சிலை, கண்ணாடி கூண்டு பாலத்திற்கு படகு சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

************

இருவரி

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

திருச்சி அண்ணா அறிவியல் மைய கோளரங்கில் வான் நோக்கும் நிகழ்வு இன்றுமாலை ஆறரை மணி முதல் எட்டரை மணிவரை நடைபெற உள்ளது.

************

வானிலை

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக தமிழ்நாட்டில் இன்றுமுதல் அடுத்த 3 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வரும் 15ஆம் தேதி நீலகிரி கோவை மாவட்ட மலை பகுதிகளின் ஓரிரு இடங்களில் கன மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா, குமரிக்கடல், வங்க கடல், அரபிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

************

கோவில்

108 திவ்ய தேசங்களில் ஒன்றான விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல் ஸ்ரீநின்ற நாராயண பெருமாள் திருக்கோவில் ஆனி பிரம்மோற்சவ தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

திருத்தேரில் எழுதருளிய செங்கமல தாயார் சமேத பெருமாளை ஏராளமான பக்தர்கள் தரிசித்தனர்.

************

மேட்டூர்

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 8ஆவது நாளாக 120 அடியாக தொடரும் நிலையில் அணைக்கு வரும் 30 ஆயிரம் கன அடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது.

************

மகளிர் கிரிக்கெட்

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 5-வது இறுதி 20-20 மகளிர் கிரிக்கெட் போட்டி பர்மிங்ஹாமில் இன்று இரவு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரை 3-1 என்ற கணக்கில் இந்தியா ஏற்கனவே கைப்பற்றியுள்ளது.

************

கிரிக்கெட்

லண்டன் லார்ட்ஸில் இங்கிலாந்திற்கு எதிரான 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய 2-ம் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் 3 விக்கெட் இழப்பிற்கு 145 ரன் எடுத்திருந்தது.

இங்கிலாந்து முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 387.

மூன்றாம் நாள் ஆட்டம் இன்றுபிற்பகல் மூன்றரை மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

************

ஹாக்கி

ஜார்கண்டில் நடைபெறும் 15ஆவது தேசிய சப் ஜூனியர் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இன்று ஹரியானா ஒடிசாவையும்,

மிஸோரம் ஜார்கண்ட்டையும் எதிர்கொள்கின்றன.

************

டென்னிஸ்

விம்பிள்டன் கிரான்ஸ்லாம் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் Amanda Anisimova, - போலந்தின் Iga Swiatek-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது